**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.563/2024**
**Preliminary Register :**
**Police Station : SemmancheryPS**

**Lw1/Pw1**
**Deposition of witness for :**
**:**

**Name : Ajay Sankar**
**:S/o. Ravi**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.05.2025.**

**(**எதிரி ஆஜர் **,** எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை :

1. நான் தற்போது காஞ்சிபுரத்தில் வசித்து வருகிறேன். நான் சோழிங்கநல்லூரில் உள்ள ஹச் சி எல் ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிய எனக்கு தெரியாது. 31.03.2022 அதிகாலை 1:30 மணி அளவில் நானும் எனது நண்பர் கமலேஷும் டீ குடிப்பதற்காக ரூமில் இருந்து வெளியே சென்ற பொழுது பின்பு டீ குடித்துவிட்டு ரூமிற்கு திரும்பும் பொழுது எனது நண்பர் கமலேசின் இருசக்கர

வாகனமான ஆர்15 கருப்பு நிற TN12 0952 என்ற வாகனத்தை நான் ஓட்ட என் பின் புறத்தில் எனது நண்பர் கமலேஷ் என்பவர் அமர்ந்திருந்தார்.

2. அப்பொழுது காரப்பாக்கத்தில் இருந்து மேடவாக்கம் வழியாக திரும்பும் பொழுது வெள்ளை நிற மாருதி ஷிப்ட் AP1766 காரப்பாக்கத்தில் இருந்து மேடவாக்கம் செல்லும் வழியில் வேகமாக வந்து திரும்பியது.

3. நாங்கள் ஆவினில் இருந்து காரப்பாக்கம் சென்று கொண்டிருந்தோம் அப்பொழுது அந்த கார் வேகமாக வந்ததால் நான் பிரேக் பிடித்ததால் கீழே விழுந்து சாலையில் தேய்த்துக் கொண்டே அந்த கார் மீது மோதி விட்டேன். விழுந்தவுடன் நான் சுயநினைவின்றி இருந்தேன். முழித்துப் பார்த்த பொழுது நான் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் இருந்தேன். எனக்கு தோளிலும் தொடையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது முகத்திலும் காயம் ஏற்பட்டது.

4. 31.03.2022 அன்று காலை 7:00 மணிக்கு நான் மருத்துவமனையில் இருந்த பொழுது போலீசார் என்னை விசாரித்தனர். என் நண்பர் கமலேசுக்கு என்ன ஆனது என்று தெரியுமா என்று கேட்டார். பின்னர் போலீசார் எனது நண்பர் கமலேஷ் இறந்து விட்டதாக தெரிவித்தார். நான் மருத்துவமனையில் இருந்த பொழுது எனது நண்பர்கள் தான் ஆண்டனி சைமன் என்பவர் காரை ஓட்டி வந்ததாக கூறினார்கள்.

5. நான் மருத்துவமனையில் அனுமதித்த போதே என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் சொல்ல சொல்ல தான் எழுதப்பட்டது அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். **(**அந்த புகார் மனு அசா ஆ **1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** போலீசார் என விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

<u>மறுவிசாரணை</u> . இல்லை

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**

**District Munsif cum**
**Judicial Magistrate,**
**Sholinganallur.**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR**
**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| **Calender** | : | |
| **Miscellaneous** | : | **CC.No.563/2024** |
| **Preliminary Register** | : | |
| **Police Station** | : | **SemmancheryPS** |
| | | **Lw2/Pw2** |
| **Deposition of witness for** | : | |
| | : | |
| **Name** | : | **Murugan** |
| | : | **S/o. Mariyappan** |
| | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.05.2025.**

**(**எதிரி ஆஜர் **,** எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**)**

முதல் விசாரணை **:**

நான் சோழிங்கநல்லூரில் வஸ்து வருகிறேன் நான் ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. செம்மஞ்சேரி காவல் நிலையத்திற்கு எதிரே தான் எனது ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது**.** என்னை அழைத்தார்கள் சாட்சியாக பெயர் மற்றும் முகவரியை

பெற்றுக் கொண்டனர். எப்பொழுது என்று எனக்கு தெரியாது  போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதிகோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சியை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது)**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

போலீஸ் விசாரணையில் கடந்த 31.3.2022 அன்று அதிகாலை சுமார் 3:15 மணிக்கு நான் சோழிங்கநல்லூர் ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோவை நிறுத்திவிட்டு சவாரிக்காக சோழிங்கநல்லூர் அருகே நின்று கொண்டிருந்தபோது TN-12-AK-0952 R15 Yamaha கருப்பு நிற இரு சக்கர வாகனத்திற்கு பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அஜய் சங்கர் என்பவர் ஓட்டிக்கொண்டு வர கமலேஷ் என்பவர் பின்னால் அமர்ந்து கொண்டு சென்ற பொழுது சோழிங்கநல்லூர் மார்க்கமாக சோழிங்கநல்லூர் சிக்னலில் வரும் பொழுது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த AP-09-CH-1766 மாருதி ஸ்விப்ட் வெள்ளை நிற கார் அதிவேகமாக ஓட்டி வந்து திடீரென்று மேற்கு திசையில் மேடவாக்கம் நோக்கி திரும்பியதால் தெற்கு திசையில் இருந்து வடக்கு நோக்கி சென்ற பைக் பிரேக் போட்டும் பைக் நிற்காமல் டயர் தேய்த்துக் கொண்டு போய் அந்த காரின் மீது மோதியதில் பைக்கில் சென்ற இருவரும் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்து பலத்த காயம் அடிபட்டு இருவரையும் போலீசார் உதவியுடன் 108 ஆம்புலென்ஸ் ஏற்றி  அனுப்பியதாகவும் பின்னால் அமர்ந்து இருந்த கமலேஷ் என்பவர் வாகன விபத்தில் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன் என்று சாட்சி அளித்துவிட்டு தற்பொழுது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற தனக்கு வழக்கைபற்றி ஏதும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை .இல்லை

மறுவிசாரணை . இல்லை

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**

**District Munsif cum**
**Judicial Magistrate,**
**Sholinganallur.**